

# கோபிகாஞ்சலி

அமரர்

## அஜந்தன் கோபிகா

அவர்களின் பிரிவுத்துயர்

குறித்த

## நினைவு மலர்

01.12.2019




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நல்லூர் வடக்கு
சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,
திருநெல்வேலி கிழக்கு, புதிய செங்குந்தா வீதியை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி கோபிகா அஜந்தன்

(ஆசிரியை–கிளி / நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த


# கோபிகாஞ்சலி

நினைவுமலர்

01.12.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்"**

என்ற கூற்றுக்கு இணங்க எங்களுடன் எந்நேரமும் இன்முகத்துடன் இருந்த எங்கள் கோபிகாவே! உமக்கு எங்களின் கண்ணீர் துளிகளை சமர்ப்பிக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் பாசத்தோடு அன்பு காட்டினீர் ஆசிரியர் பணிகள், சமூக பணிகள் என்பவற்றை செய்து உண்மையை உருவாக்கி, உள்ளம் கோவிலாகி இன்சொல் பேசி அனைவருக்கும் வாழிகாட்டி கன்னியம் மிக்க ஆசிரியையாக விளங்கி, பாசத்துடன் பிள்ளைகளுக்கு அன்புக்குரிய தாயாகவும், கணவனுக்கு பாசமிகு துணைவியாகவும் வாழ்ந்து எம் எல்லோரையும் பரிதவிக்க விட்டுச் சென்றுள்ளீர் வழி தெரியாமல் தவிக்கின்றோம் புவியில் நாம் இங்கு.

அன்புமிக்க கோபிகாவே பாசமிகு அம்மாவே உம் பிரிவை எண்ணியே தவிக்கின்றோம் நாமிங்கு அழுவதற்கு கண்ணீர் இன்றி .... உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்கின்றோம்.

பாசம் மறவாத
கணவன், பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'



மலர்வு
24.01.1990

உதிர்வு
28.07.2019

# அமரர் திருமதி கோபிகா அஜந்தன்

(ஆசிரியை - கிளி / நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை)

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விகாரி ஆனதிங்கள் ஆடியில்
பூண்ட நற்திதி துவாதசி தனில்
கோபிகா எனும் உத்தமியாள்
தாண்டவத்தான் கழல் சென்றடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் வயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
    தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
    உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
    உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
    வீரட்டா னத்துறை அம்மானே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
    பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
    உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
    செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
    உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
    சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
    அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
    பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
    மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
    பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தத் கணைத்தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுப்பொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவி
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொகவல ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழுமளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக்
கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம்பல் கோடி
யுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே.

சுந்தர நீறணித் தும்மெழுகிப்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே.

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
        திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவீணையைப் பறித்து நின்று
        பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே

அறுகெடுப் பாரய னும்மரியும்
        அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
        நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
        திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
        காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
        உலகமே லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
        காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
        நாண்மலர்ப் பாதங்கள் பாடிப் பாடி
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
        மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
        தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
        நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
        பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
        காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவள் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டத் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே

வையகம் எல்லாம் உரல தாக
மாமெரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய ஆட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ ஆட ஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்து நாமே

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க எப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியாள்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்தன் முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலந்தெங்கள் செல்வம் பாடிச்
கட்டிய மாகணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னாருக்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பருவத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி கோபிகா அஜந்தன்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சைவமும் தமிழும் சேர்ந்து விளங்கும் எழில்மிகு மாவட்டமாம் யாழ்ப்பாணம் தனிலே வரலாற்றுச் சிறப்புமிகு நல்லூரான் ஊரின் குடதிசைதனிலே! சகல செல்வங்களும் அள்ளித் தருகின்ற சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் வீதி தனிலே சதாசிவம், சுகந்தி தம்பதியினர் இணையில்லா இல்லறம் என்னும் நல்லறத்தினை சிறப்பாக மேற்கொண்டதன் பயனாக செல்வத்துள் நற்செல்வமாம் மழலைச் செல்வம்தனை சத்தியா, கோபிகா, துளசிகா, நிவேதா, சிவப்பிரியா ஆகிய ஐம்புலன் போன்ற ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களின் இல்லற இன்பம், பெண் பிள்ளைகள் ஐவராலும் மென் மேலும் சிறப்புப்பெற்றது. குடும்பத்தில் இரண்டாவது பெண் பிள்ளையாக கோபிகா பிறந்தார். இவரும் இவர் சகோதரிகளும் இன்பமாக தாய் தந்தையுடன் தமது பேதைப் பருவம் அதனை தித்திக்கும் மழலைப் பேச்சாலும், சுட்டித்தனங்களாலும் சிறப்பாய் பெற்றோருக்கு இன்பத்தை அளித்தார்கள்.

பெண் பருவத்தில் இரண்டாம் பருவமான வெதும்பை பருவம் அடைந்ததும் பள்ளிக்குச் சென்று பாடங்களைக் கற்கவேண்டிய திசையினை எட்டிய கோபிகா அவர்கள் தனது ஆரம்பக்கல்வியினை யாழ் / நல்லூர் முத்தமிழ் ஆரம்பப் பாலர் பாடசாலையில் கற்று வந்தார். சிறு வயதினிலேயே கல கலவென்று பேசும் சிறப்பான பேச்சும் சுட்டிச் சுட்டி குறும்புகளும், கவலைகளை எல்லாம் தகர்த்தெறியும் கனிவான சிரிப்பையும் தன்னகத்தே கொண்டு சிறப்பாக ஆரம்பக் கல்விதனை ஆர்வத்துடனே கற்றுவந்தார். கோக்காக் குட்டி என சகோதரிகளால் செல்லப் பெயர் கொண்டு அழைக்கப்படும் இவர் தனது க.பொ.த. சாதாரண தரம் க.பொ.த உயர்தரம் ஆகியவற்றை முறையே 2005, 2008 ஆண்டுகளில் யாழ்.மாவட்ட மகளிர் பாடசாலைகளில் ஒன்றான யாழ் / இந்து மகளிர் கல்லூரியில் கற்று அப்பரீட்சைகளிலும் சிறப்பாக தனது பெறுபேறுகளையும் பெற்றார். கல்வியில் மட்டுமல்லாது பாடசாலையின் ஏனைய அம்சங்களான விளையாட்டு, இசை, நடனம், நாடகம் என பல்வேறு கலை அம்சங்களிலும் அதற்கெனவே பிறந்தவர் போன்ற பண்பினைக் கொண்டவராக கோபிகா திகழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காலத்தில் நண்பர்கள், ஆசிரியர்கள் எல்லோரிடத்திலும் இன்முகத்தோடு பழகும் நற்பண்பாளர் இவர் என்பதால் ஏராளமான நண்பர்கள் வட்டத்தினை இறைவன் இவருக்கு வழங்கியிருந்தார்.

க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்று யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் 11 ஆம் அணியில் ஆரம்பக் கல்வித் துறையில் தேசிய ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து (2010-2012) 29.04.2013 முதலாவது ஆசிரியர் நியமனத்தைப் பெற்று கிளி/ நாச்சிக்குடா அ.மு.க பாடசாலையில் ஆசிரியராக தனது பணியினை ஆரம்பித்தார்.

இரு இதயங்கள் இடம் மாறும் இணையில்லாத திருமண வாழ்வில் தனபாலசிங்கம், சிவசோதி தம்பதியினரின் தவப்புதல்வனாம் அஜந்தன் என்னும் நல்லானை கோபி என்னும் கோபிகாவிற்கு பெற்றோரும் உற்றோரும் பேருவகை கொள்ள வானவர் வாழ்த்துரைக்க 09.09.2013 அஜந்தன் + கோபிகா எனும் இரு உள்ளங்களும் ஒன்றாய் இணைந்தனர் இல்லறம் என்னும் நல்லறத்தில் சிறப்பான தாய் தந்தை சகோதரர்கள் என வாழ்ந்த கோபிகாவிற்கு மேலும் சிறப்பாய் துணைவராக அஜந்தன் இணைந்ததும் இணையில்லா இன்பத்தில் திளைத்தார்.

கோபிகா இல்லற இன்பத்தின் விளைவாகவே இல்லறத்தின் இனிய செல்வமாம் மழலைச் செல்வம் தனை இரு தேவதைகளை இறைவன் இவர்களுக்கு இல்லற இன்பப் பரிசாக அளித்தார். அக்ஷயா என்னும் தலைமகளை 2014இல் பெற்று பேருவகை கொண்டனர் அஜந்தன் கோபிகா இருவரும். மறு தேவதையின் அவதாரமாய் வைஷாலி என்னும் திருமகளை 2016இல் வரமாய் பெற்றனர். இவர்களுக்கும் கணவர், பிள்ளைகள் இருவருடனும் சிறப்பாக திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியில், வெள்ளைப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள இல்லத்தில் இல்லறம் என்னும் நல்லறத்தினை இன்பமாய் வாழ்ந்து வந்தார் கோபிகா.

இவ்வாறே! இன்பமாய் திருமண வாழ்வில் 2013-2019 ஆடி மாதம் வரை சிறப்பாக நகர்ந்த இவர்களது இவ்வுலக இன்ப வாழ்வானது நல்லூ ரான் மீது பற்றுக் கொண்ட கோபிகாவும் அவரது குடும்பம் சார்ந்தவர்களும் நல்லூரான் திருவிழாவிற்கென கோபிகாவின் மூத்த சகோதரியான சத்தியா (அமரர்) அவர் கணவர் அவரின் பிள்ளைகள் என அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் இருந்து இலங்கை வருவதற்குத் திட்டமிட்டிருந்தனர். அவர்களை அழைத்து வருவதற்கென கோபிகாவும் அவரது குடும்பத்தினரும் சென்று கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, தனது சகோதரியின் குடும்பத்தினருடனும், தனது குடும்பத்தினருடனும் சந்தோசமாக யாழ் நோக்கி, நல்லூரானை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்கள். இது தான் கோபிகாவின் இறுதிப் பயணம் என கோபிகாவோ, நாம் எவருமோ! கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால் இறைவன் நினைத்தாரோ! இறைவா! ஏன் இந்த இளவயதில் கோபிகாவை உன்னிடம் சேர்ப்பதற்கு உங்களுக்கு அவரின் மீது பிரியமோ! 28.07.2019 A9 வீதியூடாக நல்லூரை நெருங்கி விட்டோம் எனும் நல் மகிழ்ச்சியில் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது மதவாச்சியில் இவர்கள் பயணித்த பேருந்தும், பார ஊர்தியும் விபத்துக்குள்ளானது. இதன் காரணமாக எம் குடும்பத்தின் குலவிளக்கு கோபிகாவின் உயிரும் இறை சோதியில் கலந்தது. கோபிகாவுடன் அவரின் தாயார் சுகந்தி, பெறாமகன் சிமிநாத் மற்றும் கோபிகாவின் சகோதரி சத்தியா ஆகியோரும் இறைபதம் அடைந்தனர்.

இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | அதை நழுவ விடாதீர்கள். |
| வாழ்க்கை ஒரு பயணம் | அதை சென்று முடியுங்கள். |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | அதை விடுவியுங்கள். |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | அதை ஏற்றுக்கொள்ளுங்கள். |
| வாழ்க்கை ஒரு போட்டி | அதில் வெற்றி பெறுங்கள். |
| வாழ்க்கை ஒரு கலை | அதை அழகு படுத்துங்கள். |
| வாழ்க்கை ஒரு வேதனை | அதைத் தாங்கிக் கொள்ளுங்கள். |
| வாழ்க்கை ஒரு சாவால் | அதை எதிர்நோக்குங்கள். |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதற்கு மனம் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சினை | அதற்கு தீர்வு காணுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவளே! என் தாயுமானவளே!

என்னவளே! எங்கு சென்றாயோ!
ஏன் என்னை விட்டுச் சென்றாயோ!
உன் எண்ணத்தின் விம்பங்களையோ!
என்னோடு விட்டுச் சென்றாயோ!
என் தாயுமானவளே!
எம் பிள்ளைகள்! தாயே
உனைத் தேடித் தேடி.....
அப்பா! அம்மா எப்போது வருவார் - என
மழலை மொழியில் சிணுங்கி கேட்கும் போது!
நெஞ்சுடைகிறேன் என் தாயுமானவளே!
எனக்கு இரண்டாம் தாயானவளே!
அஜந்தன் என் வாழ்வினை
அர்த்தமுற செய்தவளே - இதய கோயிலிலே
கோபி உனையே கோதையாய் - என்
ராதையாய் கோயில் கட்டி வைத்தேன்
உன் மகன் என்னை விட்டுச் சென்றதேனோ!
எம் மழலைகளை மனம் தவிக்க விட்டு விட்டு
மாயமாய் மறைந்ததேனோ - என் தாயுமானவளே!
மனைவி என்பது தாலியின் மூலம் - வந்த
கயிற்று உறவல்ல.....
கடவுள் எழுதிய தலை எழுத்தின் காற்புள்ளி
கள்ளியே! என் காதலியே - காற்புள்ளியோடு
காணாமல் சென்றதேனோ! என் தாயுமானவளே!

த.அஜந்தன்
(கணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கல்வியியற் கல்லூரியில் பட்டம் பெற்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்னும் வார்த்தை தேடி .....

அம்மா அம்மா - எங்கள் அம்மா
எங்களை மறந்து எங்கு போனீர்கள் அம்மா
எப்படி எங்களை மறந்து செல்ல
மனம் வந்ததுவோ அம்மா அம்மா

அம்மா! நீங்கள் இல்லாத எம் வீடோ
வெறிச்சோடிக் கிடக்கிறது
நீங்கள் இல்லாத எம் வாழ்வோ
கேள்விக் குறியாய்க் கிடக்கிறது
ஆயிரம் சொந்தங்கள்
அனைத்திட இருந்தாலும்
அம்மா உங்களையே
நினைத்து ஏங்குகிறது எம் இதயம்....
அம்மா! என ஆசையாய்
இனி யாரை நாம் அழைப்போம்
அன்பாய் அமுதூட்டி
ஆசை முத்தங்கள் தந்து
இனிய கதைகள் பேசிட
ஏங்குகிறது எம் இதயம்
எப்போது வருவீர்கள் அம்மா
அப்பாவுடன் நாங்களும் காத்திருக்கிறோம்
உங்கள் வருகைக்காய் .....!

**பிள்ளைகள்**
**அக்ஷயா, வைஷாலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி முதல்வரின் உள்ளத்திலிருந்து

மறைந்தும் மறையாத ஒரு ஆசிரிய விழுதின் ஆறாண்டு சரித்திரத்தை, அந்தப் பசுமையான காலத்தில் மாணவ மாண்புகளை வளர்த்தெடுத்த ஆசிரிய தீபத்தின் சாதனைகளை மாறுபாடு எதுவுமின்றி இந்நினைவு மலரில் பதிவு செய்கையில் மனது கனக்கின்றது.

வாழ்க்கை என்னும் பயணத்தில் பலர் வருவார் போவார் ஆனால் வானத்து நிலவாக சிலரே விளங்குவார்கள். அந்த வகையில் திருமதி. கோபிகா அஜந்தன் அவர்கள் எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் கலை மலர்ச்சிக்கும் காரணமானவர். அவர் தனது ஆசிரிய நியமனத்தை முதன் முதலில் எமது பாடசாலையில் பொறுப்பேற்ற போது அவரது போக்கிலும் நோக்கிலும் கல்வி அபிவிருத்தியும் இணைபாட விதானச் செயற்பாடுகளுமே முதன்மை பெற்றிருந்தமையை எம்மால் உணர முடிந்தது. மாணவச் செல்வங்களின் ஒழுக்க விழுமியங்களையும் கல்வி அபிவிருத்தியையுமே தனது இரு கண்கள் எனக் கொண்டு செயலாற்றியவர். பள்ளிச் சிறார்களை அள்ளி அணைத்து மாணவர்களின் இதயங்களை வென்றதுடன் அவர்களது வரவு வீதத்தை உயர்த்துவதற்கு பெரிதும் பாடுபட்டவர். அவை வெறும் கண்துடைப்பு அல்ல என்பதை நிதர்சனமாகக் காண்போம்.

குறுகிய காலப்பகுதிகளிலே ஆசிரிய வாண்மை விருத்தியை வளர்த்துக் கொண்ட அவர் கற்றலில் இடர்படும் சிறார்களின் கல்வி விருத்தியில் முனைப்புடன் செயலாற்றியவர் பாடசாலை நிர்வாகத்தினருடனும் சக ஆசிரியர்களுடனும் நற்புறவாக விட்டுக் கொடுப்புடன் பழகினார். மாணவர்களது உச்சக்கட்ட ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைச் செயற்பாடுகளில் உயரிய வினைத் திறனை வெளிகாட்டியவர். அதன் மூலம் பாடசாலைச் சமூகத்தின் பாராட்டுதல்களையும் தமதாக்கிக் கொண்டவர்.

குறிப்பாகச் சொல்வதானால் எமது பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் கலை மகளாகவே திருமதி. கோபிகா அஜந்தன் அவர்கள் பணியாற்றியமையை நாம் எளிதில் மறந்து விட முடியாது.

நல்லவரும் வல்லவரும் நடுவயதில் போவார் அல்லாத பேரோ அறுபதையும் தாண்டுவார். என்ற அறிஞர் கருத்துப்படி 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு எமை விட்டு பிரியும் வரை தான் வாழ்ந்த குறுகிய காலப்பகுதியில் கற்றவரும் மற்றவரும் மதிக்கும் படியாகப் பணியாற்றியவர். அவர் தான் சார்ந்த குடும்பம், சமூகம், பாடசாலைச் சூழல் ஆகிய பல்வேறு நிலைகளில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்கு அவரின் இறுதி ஊர்வலத்தில் அலை கடலென திரண்ட மக்கள் கூட்டமே சாட்சியாக அமைந்தது.

உற்றார் உறவினர் உருகிட கற்றோரும் மற்றோரும் கதறி அழுதிடக் காலனவன் கவர்ந்து சென்ற மாண்புறு ஆசிரியர் திருமதி கோபிகா அஜந்தன் அவர்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

என்ற தெய்வப் புலவன் வாக்கிற்கிணங்க இறைவன் திருவடிகளில் அவரது ஆத்ம சாந்தியடைய பாடசாலைச் சமூகம் சார்பாக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

ஆ. பரதன்

A.Parathan
Principal
Kn/Nachchikuda G.M.M.S
Poonakary
Kilinochchi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்து வழிப்புணர்வு

## மித வேகம் மிக நன்று

வீதிகளில் பாதுகாப்பாகப் பயணம் செய்வது பாதசாரிகளின் கடமை மட்டுமல்லாது சாரதிகளினதும் கடமையாகும். நாளிற்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களினால் இழப்பீடுகள் உயிர், சொத்துக்கள், எதிர்காலம் என நீண்டு கொண்டே செல்கின்றது. ஒரு புள்ளிவிபரவியல் 2014 இல் வீதி விபத்துக்களினால் 2404 பேர் மரணித்ததாகவும் 2015 இல் 2722 பேர் மரணித்ததாகவும் 2016 மற்றும் 2017 இல் 3033 இலிருந்து 3103 ஆக உயர்வடைந்ததுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 8500 களைத் தொட வைக்கின்றது. மூன்று மணி நேரத்திற்கு ஒருவர் வீதி விபத்தில் இறக்கின்றார் என்பது மிகக் கொடூரமான உண்மை. இவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியவையும் தடுக்கப்பட வேண்டியவையும். சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு இன்மையே இதற்கான ஒரே ஒரு காரணம் ஆகும்.

இரு சக்கர வாகனங்கள் ஓடும் போது கண்டிப்பாக தலைக் கவசம் அணிதல் வேண்டும். பக்கத்து றோட்டுக்குத் தானே போறன், ஒழுங்கைக்குள்ள பொலிஸ் நிக்க மாட்டான், பள்ளிக்கூடம் போகேக்க தலைக்கவசம் தேவையில்லை என்ற அலட்சியப்போக்கினை தவிருங்கள் ஏனெனில் உங்கள் தலையினைப்பாதுகாப்பது உங்கள் கடமை. ஓர் விபத்தின் போது தலையில் ஏற்படும் மோதுகையால் மண்டை ஓட்டினுள் குருதிக் கசிவுகள் ஏற்படலாம். மண்டை ஓடு ஒரு குறித்த கனவளவினை உடையது. மண்டையோடு விரிவடையும் தன்மை அற்றது. அது மூளையைப் பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட இரும்புப் பெட்டகம். ஆகவே விபத்தின் போதான குருதிக் கசிவுகள் மண்டை ஓட்டினுள் உள்ள மூளையினை நசுக்குவதனுடன் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துவதல்லது. குறிப்பாக சிறுவர்களின் மண்டையோட்டின் கனவளவு இன்னமும் சிறியது. ஆக தலைக்கவசம் அணியாது செல்லும் சிறு அலட்சியம் பாரிய விளைவுகளில் எங்களை நிறுத்தும். இது முற்றிலும் தவிர்க்கப்படக் கூடிய தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை விதிகள் நமக்கல்ல அடுத்தவனுக்கு தான் என்கின்ற மனப்பான்மை பொதுவாக எல்லோரிடமும் உள்ளது. சாலை விதிகள் நம் பாதுகாப்பிற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டவை என்பதை அனைவரும் உணர வேண்டும். இதுவே விபத்துக்களுக்கு வழி வகுக்கின்றது. இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் போது விளையாட்டாகப் பேசிக் கொண்டு போகாதீர்கள். அவ்வாறு செல்கையில் மோட்டார் சைக்கிள் கைபிடிகள் கொழுவிக் கொள்வதால் இரு சாரதிகளுமே விபத்துக்கு உள்ளாகின்றனர்.

கையடக்கத்தொலைபேசிகள் வீதியில் தவிர்க்கப்பட வேண்டிய மற்றதொன்று. தலையைக் குனிந்தபடி கையடக்கத் தொலைபேசியில் மூழ்கியவாறு சிரித்துக்கொண்டே வீதியில் கவனமற்று வேறொரு உலகில் பயணம் செய்யும் பாதசாரிகளை நாம் வீதியில் தினந்தோறும் காண்கின்றோம். மோட்டார் சைக்கிளில் செல்கையில் தலைக்கவசத்தினுள் பாதுகாப்பாக கை தொலைபேசிகளைச் செருகி வைத்து வீதியில் அக்கறையற்றுச் செல்லும் சாரதிகளையும் கவனிக்கின்றோம்.

இவர்கள் தங்கள் சுயத்திற்கு மாத்திரமின்றி பிறருக்கும் ஆபத்தானவர்கள். வீதியில் பயணிக்கையில் தொலைபேசியினை முற்றாக தவிர்க்க வேண்டும். அவசர அழைப்புகள் ஏற்படின் வீதியின் ஓரமாக வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்தி, தொலைபேசியினைக் கதைக்கும் பக்குவப்பட்ட மனநிலைக்கு நாங்கள் மாறவேண்டும்.

தொலைபேசியினை தொல்லை பேசியாக மாற இடம் அளிக்காதீர்கள்.

மித வேகம் மிக நன்று என்பதை மனதில் கொள்வோம். வழியெங்கும் போக்குவரத்து நெரிசல்கள், ஊர்ந்து, ஊர்ந்து செல்ல வேண்டும். குறித்த நேரத்தினுள் குறித்த இடத்தை அடைய வேண்டும் என எல்லோருக்கும் நிர்ப்பந்தங்கள் உள்ளன. எமது அவசரத்தினால் வீதியில் வேகமாக பயணிக்க முயல்கிறோம். வாகனங்கள் இடது புறத்திலேயே செலுத்தப்பட வேண்டும் என மறக்கின்றோம். வீதியில் வாகனங்களை இடது புறத்தினால் முந்த முயல்கின்றோம். இரயில் தடுப்பு கடவைகளில் பொறுமையாக நிற்பதில்லை. வீதியில் மஞ்சள் விளக்கைக் கண்டதும் வேகத்தினை அதிகரிக்கின்றோம். இவை எல்லாம் எம் அவசரங்களே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி பயணம் செய்பவர்கள் அவசரித்த அல்லது பதகரித்த மனநிலையில் பயணம் செய்யக் கூடாது. எமது பயணம் எமது தேவைக்கானது. அதே போன்றே மற்றவர்களினதும் குறித்த இடத்திற்கு தேவை கருதி செல்ல முன் 5 நிமிடம் முன்னதாகத் தயாராகுவோம். இடது புறத்தில் பயணிப்போம். வீதியின் பாதசாரி கடவை வரமுன் வேகத்தைக் குறைப்போம். இரயில்வே தடுப்பு கடவைகளில் பொறுமையாகக் காத்திருப்போம். 5 நிமிடம் பொறுப்பதால் நாம் எதையும் இழந்துவிடப் போவதில்லை.

வீதி சமிக்ஞைகளை மதிப்போம் என நாம் உணர்ந்து செயற்பட வேண்டும் அத்துடன் நின்றுவிடாது. ஒரு நாட்டின் சிறந்த பிரஜையாக இருப்பது எப்படி? முக்கியமான காரியமோ அதுபோன்றே பாதுகாப்பான வீதியில் பயணிப்பது மிக அவசியமென இளைய தலைமுறையினருக்கு சொல்லி வளர்ப்போம்.

மித வேகம், மிக நன்று!

## விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதற்கான காரணம்

- மது போதையில் வாகனம் செலுத்துதல்.
- உள் வீதியில் இருந்து மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருவோர்கள் பிரதான வீதிகளில் வரும் வாகனங்களைக் கவனியாது நேரடியாக பிரதான வீதிக்குள் நுழைதல்.
- நாற்சந்தி (மத்திய வளைவு) களில் வலப்பக்கம் வருகின்ற வாகனங்கள் செல்வதற்கு இடம்கொடாமை.
- ஏதோ ஒரு வாகனம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போது அல்லது வீதியில் செல்லும் போது மோட்டார் சைக்கிள்களை அல்லது துவிச்சக்கரவண்டியை முன்னோக்கி செலுத்துகின்ற போது எதிரே வருகின்ற வாகனம் பற்றி அவதானம் இல்லாமல் வாகனம் செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தக் கொடுத்தல்.
- அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல்.
- வீதிகளில் ஒரே சமாந்தரத்தில் மூன்று அல்லது நான்கு துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்துதல்.
- பாதசாரிகள் வீதிகளை கடந்து செல்ல அடையாளமிடப்பட்ட இடங்களில் அவர்களுக்கு இடம்கொடாமல் வாகனம் செலுத்துதல்.
- திருத்தப்படாத (குறைபாடுள்ள) வாகனங்களை வீதியில் செலுத்துதல்.
- சேதமான தேய்ந்த டயர்களுடன் வாகனங்களை செலுத்துதல்.
- வீதியில் இடம் உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தாது நெரிசலான இடங்களில் வாகனங்களை நிறுத்தி வீதியில் தடைகளை ஏற்படுத்துதல்.
- வீதி வளைவுகளில் எதிரே தெளிவற்றுக் காணப்படுகின்ற போது வாகனங்களை முன்னோக்கிச் செலுத்துதல்.
- இரவு வேளையில் வெளிச்ச விளக்கு இன்றி அல்லது ஒரு பக்க வெளிச்ச விளக்குடன் வாகனம் செலுத்துதல்.
- இரவு வேளையில் எதிரே வருகின்ற வாகனங்களுக்குத் தமது வெளிச்ச விளக்கை குறைக்காமல் டிம் இன்றி வாகனத்தைச் செலுத்துதல்.
- இரவு வேளையில் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துகின்ற போது அபாய விளக்கு எரியபட விடாமை.
- தலைக்கவசம் இல்லாமல் (ஹெல்மட்) மோட்டார் சைக்கிளைச் செலுத்துதல்.
- வீதியைக் கடக்கின்ற போது முதலில் வலப்பக்கமும் பின்னர் இடப்பக்கமும் மீண்டும் வலப்பக்கமும் பாராமல் வீதியைக் கடந்து செல்லுதல்.
- பஸ் நிறுத்தப்பட்டுள்ள போது பின்பக்கம் செல்லாது முன் பக்கத்தால் வீதியைக் கடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாகனங்களைச் செலுத்துகின்ற போது கையடக்கத் தொலைபேசியில் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

- இதற்கு முன்னர் தான் பல ஆண்டு காலம் எந்தவொரு விபத்தையும் சந்திக்கவில்லை என்ற மனோநிலையில், தான்தோன்றித்தனமாக வாகனத்தைச் செலுத்துதல்.

- மேலே உள்ள குறைபாடுகளை அவதானித்து தாங்கள் விபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதுடன், விலைமதிக்க முடியாத உயிரையும் தங்களின் பெறுமதியான உடமையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## மோட்டார் வாகன சாரதிகளுக்கான அறிவுரைகள்.

- தாங்கள் வாகனத்தைச் செலுத்த வேண்டியவராயின் போதைப் பொருட்களின் பாவனைக்கு முன் அது தொடர்பாக சிந்திக்கவும் போதைப் பொருட்கள் உட்கொண்டிருந்தால் வாகனம் செலுத்துவதைத் தவிர்க்கவும்.

- உங்கள் வாகனத்தின் சுக்கான் தடுப்பு ஊதி துடைப்புக் கருவி மற்றும் சைகை விளக்குகள் ஒழுங்காக இயங்குகின்றனவா எனச் சரியாக அறியவும், டயர்களின் காற்று போதுமானதாக உள்ளதா எனவும் அறியவும்.

- செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் குறைந்த பட்சத்தில் மூன்றாம் தரப்பிற்கு ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான காப்புறுதிப் பத்திரம் உங்கள் வசம் இருத்தல் வேண்டும். ஆங்கில எழுத்துக்களுடனான வாகனமாக இருப்பின் வாகன அடையாள அட்டை இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதலாவதாக சாரதி ஆசனம் மற்றும் பிற்பார்க்கும் கண்ணாடியை பொருத்தமான விதத்தில் அமைத்துக் கொள்ளவும்.

- உங்கள் வாகனத்தில் ஆசனப்பட்டி பொருத்தப்பட்டு இருப்பின் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவும். இதன் மூலம் விபத்தின் போது தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்ளலாம். பலூன் பொருத்தப்பட்ட வாகனமானால் கட்டாயம் ஆசனப்பட்டிகளைப் பொருத்திக் கொள்ளல் வேண்டும்.

- மோட்டார் சைக்கிள் செலுத்துவோரும் அவற்றில் பிரயாணிப்பவரும் தலைக்கவசம் அணிந்திருத்தல் அவசியம்.

## வீதி விபத்தின் போதான முதலுதவி

- நீங்களும் அந்த விபத்தில் சிக்கி இருந்தால் முதலில் உங்களுடைய உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். பின்னர் மற்றவர்களுக்கு உதவ முன்வாருங்கள்.

- மற்றவர்களின் காயத்தின் தீவிரத்தை அறிந்து கொள்ளுங்கள். உதாரணமாக தலையில் இருந்து குருதி வெளியேறுதல்.

- அலறாமல் அசைவில்லாமல் இருப்பவர்களை முதலில் கவனியுங்கள். ஏனெனில் அலறிக் கொண்டு இருப்பவர்களுக்கு சுவாசம் இருப்பதால் அவர்களுக்கு சற்று தாமதமாக சிகிச்சை அளிக்கலாம்.

- அடுத்ததாக சுவாசம் இருக்கின்றதா எனப் பாருங்கள். அடுத்ததாக நாடித்துடிப்பு இருக்கின்றதா எனப் பாருங்கள்.

- உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முயற்சி செய்யுங்கள்.

- மேலும் ஆபத்துக்கள் ஏதும் இருந்தால் அப்புறப்படுத்துங்கள். அடுத்ததாக பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்துங்கள். (உ-ம் : தோளில் தட்டி கேள்வி கேளுங்கள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விபத்துக்குள்ளானவர் கதைக்கவில்லை எனில் சுவாசப் பாதையில் அடைப்பு ஏதும் இருக்கலாம்.

- வாயைத் திறந்து பாருங்கள் ஏதும் இருப்பின் அப்புறப்படுத்துங்கள்.

- நாடித்துடிப்பை பரிசோதித்துப் பாருங்கள், நாடித்துடிப்பு இல்லை எனில் பாதிக்கப்பட்டவரின் மூக்கை பொத்திய வண்ணம் அவரின் வாயோடு உங்கள் வாயை இறுக்கமாக வைத்து சுவாசம் கொடுக்கவும். பின்னர் நெஞ்சின் நடுவில் அழுத்தம் கொடுக்க வேண்டும். (நெஞ்சு 5-6cm உள்ளே செல்ல வேண்டும்.

- இது இரண்டு சுவாசத்திற்கு 30 நெஞ்சு அழுத்தங்கள் என செய்ய வேண்டும். இதை சுழற்சி முறையில் தொடர்ந்து வைத்திய உதவி கிடைக்கும் வரை செய்ய வேண்டும்.

- இதன்போது ஏதாவது காயங்களில் இருந்து குருதி பெருகிக் கொண்டிருப்பின் துணியால் கட்டி அமுக்கம் கொடுத்து நிறுத்துங்கள்.

- எதையும் பருகவோ உண்ணவோ கொடுக்க வேண்டாம்.


Dr. த.கோபிசங்கர்
(MBBS, MRCS, (EDIN), MS).
Consultant Orthopadic Surgeon
Teaching Hospital Jaffna
உதவி – சி.டிசாந்


- **பணம் சேர்ப்பது மட்டும் வாழ்க்கை அல்ல. நல்ல மனங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.**
- **நல்லவற்றை பாறையில் எழுது, தீயவற்றை பனிக்கட்டியில் எழுது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுத் தீர்மானத்துக்கு அமைவாக நொவம்பர் 1 தொடங்கி 30 வரை கொண்டாடப்பட்டு வரும் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

## மண்ணும் மரங்களும் மனிதர்களும்
## ஓர் உணர்வு பூர்வமான பந்தம்

மரங்களை நடுகை செய்வதன் அவசியம் பற்றிப் பலரும் பேசி வருகிறோம். மரங்கள் மனிதர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராண வாயுவைத் தரும். உண்ண உணவு தரும். நோய்க்கு மருந்து தரும். இருக்கக் குடில் தரும். நிற்க நிழலும், வெம்மை தணிவிக்க மழையும் தரும். வெட்டு மரமாகி கைநிறையக் காசு தரும். இப்படி, மரங்கள் மனிதர்களுக்குத் தரும் பற்பல பயன்களைப் பட்டியலிட்டு மனிதர்கள் உயிர்வாழ மரங்களின் இன்றியமையாமையை வலியுறுத்தி வருகிறோம்.

மரங்கள் மனிதர்களுக்கு மாத்திரம் பயன் தருவன அல்ல. மலட்டுக் கோள்களுக்கு நடுவே பூமிக்கு உயிர் வரம் கொடுத்தவை தாவரங்கள்தான். பூமியில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களினதும் ஆதாரமே மரங்கள்தான். ஆனால், கைத்தொழிற் புரட்சியோடு சூழல் மையச் சிந்தனையில் இருந்து விடுபட்டு யாவற்றையும் எம்மை மையப்படுத்திச் சிந்திக்கும் மரபை வளர்த்துக் கொண்ட நாம் மரங்களையும் எமக்குப் பயன்படுகின்றவை என்ற அளவு கோலாலேயே அளக்கத் தலைப்பட்டிருக்கின்றோம். மரங்கள் எமக்கானவை என்ற இந்த மனித மையச் சிந்தனை கூட மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான தொடர்புகளைப் பூரணமாகத் தரிசிக்கவில்லை. மரங்களின் பயன்களைப் பற்றிப் பேசும்போது மரங்களை அறிவார்ந்த ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அணுகுகின்றோமேயன்றி மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மறந்து வருகின்றோம்.

மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பந்தம் மிகவும் ஆதியானது. மரங்கள் எங்களின் தாய் வீடுகள். ஆதி மனிதன் மரங்களில் பரண்கள் அமைத்து வாழ்ந்தான் என்பதால் மட்டுமே மரங்கள் மனிதர்களின் தாய் வீடுகள் அல்ல. ஆதி மனிதனின் தாயாதிகள் தாவித் திரிந்து கூடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலாவிய இடங்கள் மரங்கள். பரிணாமப் பாதையில் ஆதிமனிதனின் தாயாதிகளும் குரங்குகளின் தயாதிகளும் ஒரு பொது முதாதியில் இருந்தே கிளைத்துப் பிரிந்தன. இதற்கு எமது முதுகெலும்பில் கடைசி எலும்பாக உள்ள குயலலகே சாட்சி.

குரங்குகள் கிளை தாவும்போது தவறி வீழ்ந்து விடாமல் இருக்கவும், தூக்கத்தில் நிலை தடுமாறிச் சரிந்து விழாமல் இருக்கவும் தமது வால்களை ஒரு பற்றுறுப்பாகப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், மனிதர்களின் பரிணாமத்தில் வால்களின் தேவை இல்லாமல் போய்விட்டது. அந்த வால் எலும்புகளே உருச்சிறுத்து குயிலலகு என்ற ஒற்றை எலும்பாக முள்ளந்தண்டின் கடைசியில் ஒட்டியிருக்கின்றது. தொழிலற்ற பதாங்க உறுப்பாக இருந்தாலும் குயிலலகு எலும்பில் ஆபத்துக்கு உதவும் எத்தனம் ஆச்சரியப்படும் விதத்தில் இன்றளவும் குடிகொண்டு இருக்கிறது.

மரக்கிளைகளில் நாம் ஊஞ்சல் கட்டி ஆடும்போது ஊஞ்சல் உயரே செல்லும் ஒவ்வொரு தடவையும் எமது முதுகுத் தண்டின் முனை கூச்ச உணர்வெடுத்துக் குறுகுறுக்கிறது. கீழே விழுந்து விடுவோமோ என்ற பயம் ஏற்படும்போது மரக்கிளைகளைப் பற்றிவிட வேண்டும் என்ற பழைய நினைப்பில் எமது குயிலலகு எலும்பு வாலாட்டத் தொடங்குவதுதான் கூச்ச உணர்வாக எம்மால் உணரப்படுகிறது. எமது மூதாதிகளின் வீடுகள் மரங்கள்தான் என்பதற்கு இப்படி வலுவான பல ஆதாரங்கள் இருந்த போதும் புதிய வீடுகள் கட்டிக் குடிபுகத் தொடங்கியதும் வாழ்ந்த மரங்களை நன்றி மறந்தவர்களாக தறித்தழிக்கத் தலைப்பட்டிருக்கிறோம்.

மரங்கள் மனிதர்களின் ஆதிவீடுகள் மாத்திரமல்ல் ஆதித் தெய்வங்களும் மரங்கள்தான். மனிதர்கள் தெய்வங்களுக்கு உருவங்களைக் கொடுக்கும்வரை மர வழிபாட்டைக் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். ஆதி மனிதர்கள் திறந்த வெளிகளில் நடமாடத் தொடங்கிய போது இடி, மின்னல், புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சி மரங்களின் கீழேயே அடைக்கலம் தேடினார்கள். கொள்ளை நோய்கள் கொத்துக் கொத்தாக உயிர்களைப் பறித்தபோது பச்சிலை மருந்து தேடித் தாவரங்களிடமே தஞ்சமடைந்தார்கள். இயற்கைச் சீற்றங்களில் இருந்தும் நோய்களில் இருந்தும் தங்களைக் காப்பாற்றி வருகின்ற மரங்களை அவர்கள் பின்பு வழிபட ஆரம்பித்தார்கள். இவ்வாறு மரங்களைத் தெய்வங்களாகத் தொழுத தொல்வரலாறு தமிழர்களுக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களுக்கு உருவங்களைக் கற்பிதம் செய்து மரங்களுக்குக் கீழே இருத்திச் சிறு தெய்வ வழிபாடு ஆரம்பித்தபோது அதுவரை இறையாக வழிபட்ட மரங்கள் தெய்வங்களுக்கு நிழல் தரும் உறையாக மாறியது. புளியடி வைரவர், கொண்டலடி வைரவர், மருதடிப் பிள்ளையார், அத்தியடிப் பிள்ளையார், அழிஞ்சில் பிள்ளையார், அரசடி அம்மன் என்று தெய்வங்கள் மரத்தின் பெயரோடு அழைக்கப் பெறுவது இதற்கான சாட்சியம் ஆகும். பெரும்பாலான ஆலயங்களில் தல விருட்சங்களும் பலவற்றில் கோயில் காடுகளும் இப்போதும் காணப்படுகின்றன. எனினும் சிறு தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடாகி சுற்றுமதில் பிரகாரம், கோபுரம் என்று ஆலயங்கள் விரிவடைய ஆரம்பித்தபோது மரங்களும் தமது இறை மகிமையை மெல்ல இழக்கத் தொடங்கின.

பண்டைத் தமிழர்களுக்கும் மரங்களுக்கும் இடையிலான பிணைப்பு இறைநம்பிக்கையோடு முற்றுப்பெறவில்லை. இன்னும்ஏராளமானவற்றைத் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளின் பொக்கிசங்களாகத் திகழும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன. தற்போதைய குடியாட்சியில் அரசுகள் தேசிய மரம், தேசிய மலர் என்ற தேசியச் சின்னங்களைக் கொண்டிருப்பதைப் போன்று முடியாட்சியில் மூவேந்தர்களும் ஒவ்வொரு மரங்களோடு தங்களை அடையாளப்படுத்தியிருந்தார்கள். சேரர்கள் பனையையும் சோழர்கள் அத்தியையும் பாண்டியர்கள் வேம்பையும் தங்களது குலக் குறிச் சின்னங்களாகக் கொண்டாடினார்கள். இவற்றின் மலர்களிலான மாலைகளைச் சூடிக் கொண்டார்கள். பறம்பு நாட்டை ஆண்ட குறுநில மன்னர் பாரி கொழுகொம்பு இல்லாது துவண்டிருந்த முல்லைக் கொடிக்குத் தனது தேரை ஈந்ததாகப் புறநானூற்றில் கபிலர் பாடி வைத்துள்ளார்.

சங்ககாலத்தில் போரில் ஈடுபட்ட தமிழ் மன்னர்களும் அவர்தம் படையினரும் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு வகையான மலர்களைச் சூடியிருந்திருக்கிறார்கள். போர் ஆரம்பிப்பதற்கான அறிவிப்பாகப் பகைநாட்டின் ஆநிரைகள் கவரப்படுவது சங்க காலத்துப் போர் மரபு. அதன் போது வெட்சிப் பூவையும் எதிரியின் ஆள்புலத்துள் நுழையும் போது வஞ்சிப் பூவையும், கோட்டை கொத்தளங்களைத் தாக்கும்போது உழிஞைப் பூவையும் போர் உக்கிரமடையும்போது தும்பைப் பூவையும், வெற்றியின்போது வாகையையும் சூடிக் கொண்டார்கள். போர்க்களத்தில் பூவைச் சூடியவாறு பொருத வரலாறு தமிழ் மன்னர்களுக்கு மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தான ஒன்றாகவே இருந்துள்ளது. வேறு எவரும் இவ்வாறு செய்ததாக வரலாறு இல்லை.

மரங்களை இரத்த உறவுகளைப் போன்றும் நேசித்தவர்கள் தமிழர்கள். மங்கை ஒருவர் புன்னை மரம் ஒன்றைத் தனது தங்கையாக உருவகித்து வளர்த்த காரணத்தால் அதன் முன்பாகத் தனது நாயகனுடன் அளவளாவ விரும்பாதவளாய் நாணிக்கோணினாள் என நற்றிணை இலக்கியத்தில் உள்ளது. தலைவனின் மலையில் இருந்து மழை நீரால் அடித்து எடுத்து வரப்பட்ட காந்தள் கிழங்கை நட்டுத் தன்னை ஆற்றுப்படுத்திய நாயகி பற்றிக் குறுந்தொகை கூறுகிறது. தென்னையினதும் கமுகினதும் கன்றுகளை நாம் இப்போதும் பிள்ளைகள் என்று தான் கனிவோடு அழைத்து வருகிறோம். இறந்த உறவுகளின் நினைவாக மரங்களை நாட்டி அந்த உறவுகளின் பெயர்களை அம் மரங்களுக்குச் சூட்டி அழைத்த வழக்கமும் எம்மிடையே இருந்துள்ளது. தமிழகத்தில் சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் வாழும் சோளகர் என்ற பழங்குடியினரிடையே தற்போதும் அந்தச் சடங்கு நடைமுறையில் உள்ளது.

மரங்களைத் தெய்வங்களாகவும் குலக் குறிகளாகவும் உறவுகளாகவும் கொண்டாடியவர்களின் வழித் தோன்றல்கள் நாம். ஆனால் இன்று பச்சை மரங்களின்மீது எவ்விதத் தயக்கமுமின்றிக் கோடாரிகளைப் பாய்ச்சி வருகிறோம். ஒரு மரத்தை அழித்துத்தான் என்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் மரம் வாழட்டும் நான் சாகிறேன் என்ற சங்கப் புலவனின் உறவினர்களான நாம் இன்று எவ்விதக் கருணையும் இன்றி மரக் கொலைகளைச் செய்து வருகின்றோம். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரின் வாரிசுகளாக இருந்தும் நட்ட மரங்களைப் பராமரிக்காது பட்டுப் போகச் செய்கிறோம்.

அறிவியல் வளர்ச்சி எமது பண்பாட்டில் இருந்து வந்த பல நல்ல கூறுகளை இன்று புறமொதுக்கி விட்டது. அவற்றுள் மரங்களுடன் நாம் கொண்டிருந்த உணர்வு பூர்வமான அணுகுமுறையும் ஒன்று. அறிவியல் எப்போதும் அபிவிருத்தியின் பக்கம் சார்ந்ததாகவே இயங்கும். அபிவிருத்தி தன்பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும், அது மனிதர்களாக இருந்தாலுங்கூட அழிப்பதற்குத் தயக்கம் காட்டுவதில்லை. இதனாலேயே நகர அபிவிருத்தியின்போதும் வீதி அகலிப்பின் போதும் மின் வழித்தடம் மற்றும் தொலைத் தொடர்பு வழித்தடங்களை அமைக்கும் போதும் மாற்று வழிபற்றிச் சிந்திக்காமல் மரங்களைக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாய்த்து வருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான உணர்வு பூர்வமான பண்பாட்டு உறவைத் தூண்டி விட்ட நாம், மரங்களுக்கும் மண்ணுக்கும் இடையிலான உயிரோட்டமான உறவைக்கூட மறந்து வருகிறோம். மரங்களை நடுகை செய்வோம் என்று சொல்லும் இயற்கை ஆர்வலர்கள்கூட எமது மண்ணுக்குப் பொருத்தமான மரங்கள் எவை என்று சொல்வதில்லை. எந்த மரம் என்றால் என்ன எல்லாமே மரந்தானே என்ற எண்ணமே பொதுப் புத்தியில் வேரூன்றி வருகிறது. இதனால்தான் மகோகனி, தேக்கு போன்ற அயல் நாட்டு மரங்களை நடுவதில் காட்டும் நாட்டம் இந்த மண்ணுக்குச் சொந்தமான மரங்களின் மீது இல்லாது உள்ளது.

இலங்கையில் உள்ள ஈரப்பலா, கொறக்காப்புளி, காட்டுமா, எண்ணெய் மரம் உள்ளிட்ட சில தாவரங்கள் வேறு எந்த நாடுகளினதும் இயற்கைச் சூழலில் காணப்படுவதில்லை. ஒரு பிரதேசத்துக்கு மாத்திரமே உரித்தானதாகக் காணப்படும் இத்தகைய மரங்களைத் தாவரவியலாளர்கள் உள்நாட்டுக்குரிய (endemic) இனங்கள் என்கிறார்கள். தேக்கு, மகோகனி, இப்பில் இப்பில் இயூகலிப்ரஸ் ஆகியவை இலங்கைக்குப் பிற நாடுகளில் இருந்த எடுத்து வரப்பட்ட மரங்கள். இவ்வாறு புகுத்தப்பட்ட இனங்களை அந்நிய இனங்கள் (exotic) என்கிறார்கள். இந்த இரண்டு தரப்புத் தாவரங்களையும் தவிர, மண்ணின் மைந்தர்கள் என்று இந்த மண்ணுக்கு நாம் சொந்தம் கொண்டாடுவதைப்போல, மண்ணின் மரங்கள் என்று இந்த மண்ணுக்குச் சொந்தமான இன்னுமொரு தரப்பும் உண்டு.

எமது பிரதேசங்களில் குளக்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் நெடிதுயர்ந்து நிற்கும் மருது இங்கு இயற்கையாகவே பரிணாமித்து இந்த மண்ணைத் தனது சொந்தமென ஆட்சி செய்யும் ஒரு தாவரம். அதே சமயம், இவை இந்தியாவிலும் இயற்கையாகக் காணப்படுகின்றன. இப்படி ஒரு பிரதேசத்து இயற்கைச் சூழலில் தாமாகவே வளரும் தாவரங்கள் இன்னுமொரு நாட்டிலும் இயற்கையாகவே காணப்படுமாயின் அவற்றை அந்த மண்ணுக்குச் சொந்தமான (native) இனங்கள் அல்லது சுதேசிய இனங்கள் என்கிறார்கள். ஆல், அரசு, அத்தி, புன்னை, புங்கு, வில்வம், அழிஞ்சில், இலுப்பை, நாவல், கொண்டல், தான்றி, வாகை, வேம்பு உள்ளிட்ட பல மரங்கள் எமது மண்ணுக்குச் சொந்தமான மரங்களாக உள்ளன. மலைவேம்பும் இவ்வகையினதே.

மலைவேம்பு வயலும் வயல் சார்ந்த நிலத்திணையுமான எமது மருத நிலத்துக்குச் சொந்தமான மரம். இதன் வேர் முதல் இலைத் துளிர் வரை அத்தனை பாகங்களுமே மருத்துவப் பெறுமதி மிக்கவை. தமிழ் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிய போது இம் மரத்தின் கசாயத்தையே தமிழக அரசு உத்தியோகபூர்வ மருந்தாக அறிவித்திருந்தது. தொன்று தொட்டுத் தமிழ் மக்களின் பிணிதீர்க்கும் நாட்டு வைத்தியராகப் பணியாற்றி வந்த இம் மரத்தை இன்று மறந்த விட்டோம். அந்நிய வரவான மகோகனி மரத்தையே மலை வேம்பு என்று தவறாகப் பெயர் சூட்டிக் கொண்டாடி வருகிறோம். உண்மை மலைவேம்பு நட்டுப் பராமரிப்பார் எவருமின்றி எமது சூழலில் காண்பதற்கு அரிதாகி வருகின்றது. யாழ். பொது நூலக நுழைவு வாசலுக்கு வெளியே இரு மருங்கும் வரவேற்பாளர்கள் போன்று இரு மலை வேம்பு மரங்கள் நிற்பதைக் காணலாம்.

சொந்த மரம் எது அந்நிய மரம் எது என்பதை எம்மைவிட எமது சூழலில் வாழும் உயிரினங்கள் அதிகமாகத் தெரிந்து வைத்துள்ளன. ஆல், அரசு, அத்தி, இத்தி மரங்களில் குதுாகலமாகக் கூடுகின்ற விதம்விதமான எண்ணற்ற பறவைகளும் பூச்சிகளும் பிற உயிரினங்களும் இதற்கான சாட்சிகள். இவை சொந்த மரங்களை நாடுகின்ற அளவுக்கு அந்நிய மரங்களைத் தேடுவதில்லை. சொந்த மரங்கள் தனிமரங்கள் அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு காடு. இவை எண்ணுக்கணக்கில்லாத உயிரினங்களின் உணவிடமாகவும் உறைவிடமாகவும் விளங்குகின்றன. ஆனால், நாம் பத்து வருடங்களில் பல இலட்சம் ரூபா பணம் கிடைக்கும் என்று சொந்த மரங்களின் இடத்தை மகோகனிகளாலும் தேக்குகளாலும் நிரப்பிக் கொண்டிருக்கிறோம்.

மரங்கள் எவற்றையுமே இயற்கை தவறாகப் படைக்கவில்லை. இயற்கை தன் பரிணாமத் தராசில் மரங்களை எடை போடும்போது அவை மனிதர்களுக்குப் பயன்படுமா என்பதை அல்லாமல் சூழலுக்கு உகந்தவையா என்பதையே கருத்தில் கொள்கிறது. மரங்களை எந்த மண்ணின் சொந்த மரங்களாக இயற்கை தோற்றுவித்ததோ அம் மண்ணின் சூழற்சமநிலையிலும் உயிர்ச் செழிப்பிலும் அவை ஆற்றி வரும் பங்கு இன்றிமையாதது. ஆனால், புதியதொரு சூழலுக்கு இடம் மாற்றப்பட்டு வலிந்து புகுத்தப்பட்ட அயற் தாவரங்களாகும்போது அவை சூழலின் சமநிலையைக் குழப்பி விடுகின்றன. சில அந்நியன்கள் நாசகாரத் தாவரங்களாகவும் ஆகிவிடுகின்றன. இதற்கு எமது சூழலில் பரவி வரும் சீமைக்கருவேலமும், இப்பில் இப்பிலும் பரிச்சயமான எடுத்துக்காட்டுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தென் அமெரிக்க மரமான சீமைக்கருவேலம்(Prosopis juliflora) வனவளத்திணைக்களத்தால் 1950 களில் மண்ணரிப்பைத் தடைசெய்யும் நோக்குடன் அம்பாந்தோட்டையில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீர்த்தாகம் மிக்க இம்மரம் 20 மீற்றர் ஆழத்துக்குக் கீழாகவும் வேரோடி நிலத்தடி நீரை வேக வேகமாக உறிஞ்சி நிலங்களை மூடி வளரக்கூடியது. இதனால், உள்ளூர் உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்படுவதோடு கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையும் அருகி வருகிறது. வடக்கிலும் இது ஓர் ஆக்கிரமிப்புகளை மரமாகத் தற்போது உருவெடுத்துள்ளது. மெக்சிக்கோவைத் தாயகமாகக் கொண்ட இப்பில் இப்பில் (*Leucaena leucocephala*) கால்நடை உணவாக இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது. ஆனால், வேகமாகப் பெருகும் இதன் ஆற்றலால் இந்த மண்ணின் மரங்களை இது ஓரங்கட்டி வருகிறது.

மரங்களைக் காற்றைச் சலவைசெய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித் தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். இதற்கு நிகராக இந்த மண்ணுக்கும் எமக்கும் சொந்தமான மரங்களை அடையாளம் கண்டு அவற்றை முதன்மைப்படுத்துவதும் இன்றியமையாதது. கூடவே அந்நிய மரங்களின் அறிமுகத்தின் போது இரட்டிப்புக் கவனமும் கட்டாயமானது. மர நடுகை பற்றியும் சூழல் பாதுகாப்புப் பற்றியும் பேசும்போது இவற்றைக் கணக்கில் எடுக்காமல் எவையும் முழுமை பெறாது.

- கட்டுரையாளர் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சரும் ஆவார்.

பொ. ஐங்கரநேசன்
**M.Sc.PGDJMC**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயக் கிரியைகள்

## மகா ம்ருத்யஞ்ஜய மந்திரம்

"ம்ருத்யஞ்ஜய" என்றால் "மரணத்தை வெல்வது" என்று பொருள். மரணத்தை வெல்வதற்கான மந்திரம் என்று இந்த மந்திரம் அழைக்கப்படுகின்றது. மரணத்தை வெல்வது என்றால் உடல் அழியாமல் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்வது என்று பொருளல்ல. உடலிலிருந்து உயிர் பிரிந்து மரணம், இதனை உணர்வு பூர்வமாகச் செய்து, அதாவது வாழும்போதே உடம்பைத் தனக்கு வேறான ஒன்றாக அனுபூதியில் உணர்வதுதான் மரணத்தை வெல்வது. பற்றற்று வாழ்கின்ற ஒருவனை உடம்பின் அழிவு எந்தவிதத்திலும் பாதிப்பதில்லை. தான் உண்மையில் உடம்பல்ல, அதனுள் உறைகின்ற அழிவற்ற ஆன்மா என்பதை அவன் உணர்கிறான். அத்தகைய ஒரு நிலையை வேண்டிப் பிரார்த்திக்கிறது இந்த மந்திரம்.

வெளியே செல்லும்போது இந்த மந்திரத்தை ஓதுவது நம்மை விபத்துக்களிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும் என்று கூறப்படுகிறது. இறந்தவர்களை உத்தேசித்து இந்த மந்திரத்தை ஜெபிப்பதால் அவர்களுக்கு நற்கதி கிடைக்கும். குறிப்பாக அகால மரணமடைந்தவர்களை உத்தேசித்து ஜெபித்தால் அவர்களுக்கு ஆன்மா சாந்தி கிடைக்கும் என்று கூறப்படுகிறது. தினமும் சிவபுராணம் ஓதி, முடிவில் பன்னிரு தடவைகள் இம்மந்திரத்தை ஓதவேண்டும். ஒவ்வொரு தடவை மந்திர உச்சரிப்பு முடிவிலும் "ஓம் நமசிவாய" எனக் கூறி முடிக்க வேண்டும். இப்படியாகவே பன்னிரு தடவை ஓதினால் மரணத்தைக் கடந்த நிலை உருவாகிறது. நன்முத்தியும் கிடைக்கும். மரண வீடுகளிலும், சிதை மூட்டும் போதும் இப்படியாகச் சிவபுராணம் பாடி பன்னிரு முறை இம் மந்திரத்தை ஓதினால் அந்த ஆன்மாவுக்கு முத்தி கிடைக்கும்.

"ஓம் த்ர்யம்பகம் யியமஹே
ஸிகத்திம் புஷ்ட்டிவர்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முசக்ஷீயமாம்ருதாத் - ஓம் நமசிவாய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்,

நறுமணம் கமழ்பவரும், உணவூட்டி வளர்ப்பவரும், முக்கண்ணரு மாகிய சிவபெருமானைப் போற்றி வழிபடுகிறோம். வெள்ளரிப்பழம் காம்பி லிருந்து விடுபடுவதுபோல் மரணத்தின் பிடியிலிருந்து விடுபடுவோமாக! ஆன்ம நிலையிலிருந்து விலகாமல் இருப்போமாக!

## சைவ அபரக்கிரியை

ஆன்ம ஈடேற்றம் குறித்துச் செய்யப்படும் கிரியை பூர்வக்கிரியை, அபரக்கிரியை என இரண்டு வகைப்படும். தாயின் கருவில் உருவாகும் காலம் தொடக்கம் மரணத்திற்கு முன்னளவும் செய்யப்படும் கிரியை பூர்வக்கிரியை எனப்படும். மரணமெய்வது நிலையில் இருந்து ஆரம்பித்து பின்னர் செய்யப்படும் கிரியை அபரக்கிரியை எனப்படும்.

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யப்படும் கிரியை ஆதலால், இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்கிராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமய தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாகும். சமய தீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது, திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும். ஆதலால் எல்லோரும் சமய தீட்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## உக்கிராந்தியக் கிரியை

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும்போது (மரணவேளை) சுற்றத்தவரிடம் பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்துத் தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியாரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சிவதீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண் பூசி, அவர் வாயில் கங்கா தீர்த்தம் விட்டு, அவர் தலையைத் தம் மடிமீது வைத்து, அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின், உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து, நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு கிடத்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியாற் கட்டிவிடவும். இதே போல் கைப்பெருவிரல்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டவும்.

வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டிவிடவும். உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும், பிரேதத்திற்குக் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத் துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப்பாகத்திற்கு குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து தேவார திருவாசகங்களைப் பக்தியுடன் ஓதவேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்சமியில் ஒருவர் இறந்தால் இதற்குத்தானம், சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும்.

## சூர்ணோற்சவம் (வீட்டில் நடைபெறும் கிரியை)

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும், மேலே வேயப்படும் ஓலை பச்சை ஓலையாயும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன் வாழை குலையுடன் இருக்க வேண்டும். நிலத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தில் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக்கும்பமும் வைக்கவும்.

இறந்தவர் சமய தீட்சகராயின் உருத்திரமூர்த்தியையும், விசேட தீட்சகராயின் ஈசுவரமூர்த்தியையும் நவாண தீட்சதர், ஆசாரி அபிடேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியையும், நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத்திற்கென குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையும் அதற்குக் கிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரி தாடனத்திற்காகப் பேரியையும் வைக்கவும். உரல், உலக்கைக்கு மாவிலை, கூர்ச்சம், புதிய வஸ்திரம் கட்டி மலர்மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும், மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண் ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அபிடேகப் பொருட்கள், இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து, அதிற் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும்படி காரணமகத்தில் உள்ளது. இக்கும்பசலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே அமைத்தல் வேண்டும்.

ஸ்நபன கும்பத்திற்கு தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்ச கவ்வியத்தையும் அமைக்கவும்.

## கிரியை செய்வோன்

தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாதபோது மனைவி, கணவன், மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், தோழன், அரசன் ஆகிய இவர்களுள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர்கள் அல்லது தாய்க்குக் கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து, நீராடி, புதிய வஸ்திரம் அணிந்து, அனுட்டானம் முடித்தல் வேண்டும். குரு, கர்த்தாவிற்கு விபூதி கொடுத்து, பவித்திரம் அணியச் செய்து, உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்துகொள்வார். விநாயக பூஜை புண்ணியாகவாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்சகவ்வியத்தை மண்டபத்தில் தெளித்து, இடத்தைச் சுத்தி செய்து, நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக்கொள்வர்.

இங்கு கர்த்தாவிற்குப் பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கக்கூடாது. கிரியை நடைபெறும்போது, திரு முறைப்பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு அங்நியாசம், கரநியாசம், சிவாகம் பாவனை செய்து ஸ்நபன கும்ப பூசை முடித்து, அக்கினி காரியம் முடித்து பூரணா குதி கொடுத்து கிரியைகளைப் பூர்த்தி செய்வார். கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூர தீபங்காட்டி பின், பிரேதத்தைக் குளிப்பாட்டுவதற்காக, வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று, தலை தெற்காகக் கிடத்தி, அசௌசிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய், அரப்பு என்பவற்றைப் பிரேதத்தின் சிரசில் வைப் பர். பின்பு அரிசிமா, மஞ்சள்மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து பின் பஞ்ச கவ்வியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க, வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங்கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து, பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்குக் கொண்டுவர வேண்டும். தலை தெற்கில் இருக்கக்கூடியதாக குருக் களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரிற்குழைத்து, சத்தியோசாதம்

முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டுகள், இரண்டு விலாக்கள், முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி பன்னனீராற் கைகழுவி, நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீற்றுப் பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டு பூமாலை சாத்தவும்.

## சுண்ணம் இடித்தல்

பேரிதாடனம் செய்து, அதன்பின் உரலில் பூமிதேவியையும், உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்னும் உலக்கை நாட்டி அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொரு பது மந்திரம் சொல்லி, மூன்று தரம் இடித்துப் பின் திருவாசத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்சபுராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப் பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து, கர்த்தா நெற்றியில் சாத்தி, மிகுதியை உடல் முழுவதிலும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப் பிள்ளைகள் முதலானோர் பிரேதத்தைச்சூழ நின்று தீபங்கள் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறை யானது. நம்மவர்களின் ஆசாரக் குறைவு கருதி, பிரேத சுத்தியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு சிவகும்ப ஸ்நானம் முடித்து, அதன் பின்பே சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித்தானம் கொடுத்தலும், பிரேதயாத்திரையின் பொருட்டு, யாத்திரா தானமும் நிறைவு செய்து, குருக்களுக்குத்தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப்புறமாகச் சுற்றி வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி-பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்தது) மனைவி, மக்கள் பிரேதத்தின் பூவடிகளிற் போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறைதாலியை (தீபம், நெல் நிறைந்த கொத்து எனும் அளவுக்கலம் "சேர்") பிரேதத்தின் கையால் தொடச் செய்து, வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றைச் சேலை முந்தானையில்

முடிந்துவிடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி, தலைப்பகுதியில் ஒரு முடிச் சிடவும். கீழே உள்ள ஆர்க்கைத்துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களிற் பச்சை மரத்திற் கட்டப்பட்ட பாடையிற் பச்சைத் தென்னை பன்னாங்கிற் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக மரத்தால் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமான மூன்று முறை சுற்றி வந்தபின், பிரேதம் மயானத்துக்குக் கொண்டுசெல்லப்படும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல, புகையுடன் கூடிய நெருப்புக் கலத்தை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர, வாத்தியம், சங்கு ஒலிக்கத்திருமுறைப்பாடல்கள் பாடியவாறு, அஸ்திர மந்திரத்துடன், பொரிதூவியவாறு சுட லையை அடைந்து, தலை தெற்கே இருக்குமாறு பாடையை இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி, அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை எடுத்து வைத்து தேங்காயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து, தலைப்பக்கத்தில் வைத்து, அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து, கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாகமும் 3 முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கே நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை தனக்கு முன்பக்கத்திற்குப் போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டிற் சென்று பவித்திரம், உபவீதம் என்பவற்றைக் கழற்றி சிதையிற் போட்டு நமஸ்காரம் செய்து திரும்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி, நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளலாம்.

நிவாபாஞ்சலி தருப்பணம், பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியாபனத்திலும் செய்யலாம். சுடலையில் இருந்து வீட்டுக்கு வரும்போது, ஒரு சிறிய இரும்புப் பொருள் கொண்டுவர வேண்டும். ஏனெனில் பேய், பிசாசுகள் தொடராமலிருக்க இரும்புக் கத்தியைக் கொண்டு வருவர். சுற்றத்தவரோடு வீட்டு வாயிலுக்கு வந்ததும் வேப்பிலை கடித்து உமிழ்ந்த பின் ஒரு கல்லில் ஏறி உலக்கையைக் கடந்து கைகால் கழுவி, பின் நீராடி, வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய்த் தயாரித்த சோறு, கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து, தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர், உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசிகள் (ஞாதிகள்) அல்லாதோர், அங்கு உணவு உண்டால், அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி, நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்தல் வேண்டும். தாம் உண்பதற்கு முன் பிதுர்பாகம் திருவிளக்கடியிற் படைத்துத் தியானித்து ஆன்மம் பிரீதிக்கு வேண்டியபின் உணவருந்த வேண்டும்.

## அஸ்திசஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டியப் பிராயசித்தம் ஓமம், தத்துவ ஓமம் செய்யவும். அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து உச்சிவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரமமந்திரங்களைக் கூறி, முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி, தூபதீபம் காட்டியபின், முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசாதம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை சேகரித்து எடுத்து, முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாததிரத்தின் வாயைப் புதிய துணியால் மூடிக் கட்டவும். மிகுதியாயுள்ள எலும்புச் சாம்பலை அள்ளி அவ்விடத்தைச் சுத்தி செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து பால் தெளித்து, குளிரப்பண்ணி, வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்கப்படாத உழுந்தில் செய்தது) முதலியவற்றைப் பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு, நிவேதித்து, திருமுறை ஓதி, வழிபாடு செய்த பின்னர், எலும்பையும் சாம்பலையும் சமுத்திரம் முதலிய நீர் நிலைகளில் விடவும். அஸ்தியை அந்தியேட்டிக்கோ அல்லது காசிக்கோ கொண்டு செல்லவென்று எடுத்து வைப்பது முறையல்ல. வீட்டிற்கு வரும்போது வாசலில் வேப்பிலை மென்று உலக்கையைக் கடந்து வருதல் வேண்டும்.

## அஸ்திசஞ்சயனத்தின் போது கொண்டு செல்பவை

அரிசிமாவைப் பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டுபோக வேண்டும். அத்தோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவர்த்தி, பழ வகை, இளநீர், பாக்கு, வெற்றிலை, பூஜைக்குரிய பொருட்கள்

## தனிஸ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோஷமுண்டு. இதற்குச் சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூரண கும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது பாதுகாக்க வேண்டும். நீற்றுப் பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்போது கமுகம்பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேதத்துடன் கமுகம் பிள்ளை எடுத்துச்செல்வர்.

சுபநட்சத்திர சுபவாரத்தில், பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம். ஆசாரியர் நித்திய கருமம் முடிந்தபின், புண்ணியாக வாசனம் பஞ்சகவ்வியம் ஸ்தானசுத்தி செய்வார். விக்கினேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்கள் சாத்தி, சோடக பூஜை செய்ய வேண்டும். பசு சாணம், சலம் இவைகளை வைத்து, இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலப் பாத்திரமும், சதயத்திற்கு எள்ளும், பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை) உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டுபடி நெல் பரவி, ஒருபடி அரிசியும் அரைப்படி எள்ளும் காற்படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து அதில் லஷ்மியை ஆவாகனஞ் செய்து, லஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து நைவேத்திய தூப தீபம் கொடுத்து, அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து, கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி அதில் லஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து, கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி கும்பநீரால் அபிஷேகம் செய்து பஞ்சகவ்வியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து ஆசாரியாரைப் பூஜை செய்யவும். இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல் வருமாறு.

அந்தியேட்டி அன்று இரவு வீட்டு முற்றத்தில் பந்தலிட்டு வெள்ளை கட்டி, மாவிலை, தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகிச் சாந்தியை ஆரம்பிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினேஸ்வரர் பூஜை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்விய பூஜை முடித்து, முற்றத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள்மா, கரிமா, இலை (பச்சை), செங்கல் (சிவப்பு) மா இவற்றால் சிதாஸ்தான பதம் வரைந்து, இதிற் பஞ்சதத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினாற் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து, இறந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து அக்கினி உண்டாக்கி, ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முற்றத்துடன் புத்தளி கையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர் நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி அநுட்டானம் முடித்தபின் சிவன், வர்த்தனி, லக்ஷ்மி, நவக்கிரக தேவர்களையும் பூஜித்து, கர்த்தாவிற்கு சிவன், வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின் ஐந்து பலமும், எள் எனின் இரண்டு படியும், வஸ்திரம் எனில் இரண்டும், வெல்லமாயின் பத்து பலமும், வெள்ளி எனில் ஒரு பலமும் தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம், சதயத்திற்கு மூன்று மாதம், ரேவதிக்க பதினைந்து நாட்கள் தோஷமாகும்.

## எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற கிரியை பற்றி, ஆகமங்கள் ஆகியவற்றிற் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளிற் செய்யப்படும். தேவை கருதி ஐந்தாம் நாளிற் செய்வதும் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகையாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து, தீபம் காட்டி, அவ்வளவு வகைகளிலும் சிறுபகுதியை எடுத்து, தீப்பந்தம் இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளையில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும்போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகைகள் தயாரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேஷ்டி-சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர்வாண தீட்சை உடையவர்களுக்கு, அவர்கள் பெற்ற தீட்சை வகையிற் செய்யப்படும். விசேட, நிர்வாண அந்தியேஷ்டியும், சைவ ஆசாரம் உடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும். சமய அந்தியேஷ்டியும் பிரேதத்திற் சுடலையில் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி, ஆசௌச முடிவில் 31ஆம் நாளிற் செய்யப்படும். இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர்.

மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தால் அந்தியேஷ்டி (தர்ப்பை சுடல்) நாள் பார்த்துத்தான் செய்ய வேண்டும். நந்தை, பத்ரை, திரயோதசி தவிர்ந்த திதிகளுள், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம் தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (காலவி தானம்) நந்தை -பிரதமை, ஷஷ்டி ஏகாதசி, பத்ரை-துதியை, ஸப்தமி-துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புநர்பூசம், விசாகம், பூரட்டாதி 26ஆம் நாள்களுக்கு மேல் 31ஆம் நாள் வரையில் அந்தியேஷ்டி செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக்கரை, வீடு (கிணற்றடி ஆகிய இடங்கள் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங்கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரெண்டு அல்லது நாலு கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி, விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து, தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத்தினால் நிலத்தை மெழுகி, மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பதத்தில் ஓமகுண்டலமும், வடமேற்கில் சிவகும்பமும், வடகிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும், தென்மேற்கிற் பஞ்சகவ்விய மேடையும், தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிவையில் (மண்டபத்தின் சுற்றுப்புறத்தில் தசாயுதகும்பங்களையும் அமைத்துக்கொள்ளவும்.

சிதாவஸ்து தானத்தை வடக்குத் தெற்காக நீண்ட சதுரமாக்கி, இருபத்தைந்து பதமாகப் பிரித்து, நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள்மாவும், தென்மேற்கில் நாலு பதத்திலும் வெள்ளைமாவும், தென்கிழக்கில் நாலு பதத்திலும், சிவப்பு மாவும், வடமேற்கில் நாலு பதத்தில் கறுப்பு மாவும், வடகிழக்கில் நாலு பதத்தில் பச்சைமாவும், வடக்கில் உள்ள ஒரு பதத்திற்கு சிவப்பு மாவும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளை மாவும், தெற்கில் உள்ள ஒரு பதத்திற்கு கறுப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட்டுக் கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளாற் முறுக்கி இடப்பக்கமாக முடிந்து, ஐவந்து தர்ப்பைகளால் கைகளும், பதின்மூன்று தர்ப்பைகளாகப் பிரித்து கால்களையும் ஆக்க வேண்டும்.

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து, தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து கர்த்தாவிற்கு திருநீறு கொடுத்து, சங்கற்பம் செய்து கொண்டு, சளீகரணம், பூதசுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம், செய்து, சிவோகம் பாவனை முடித்து ஞானகட்கதாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகவ்விய பூசை முடித்து யாக மண்டபத்தையும் கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகவ்வியத்தால் (புரெட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து, சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத்தில் பாசுபத்தாஸ்திரவர்த்தளி ஆசனத்தில் இடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதாவஸ்து பூஜை

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும், பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில் நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும், விஷ்ணுவையும் தென்கிழக்கு மூலையில் நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும், உருத்திரனையும் வடமேற்கு மூலையில் நான்கு பதத்திலும் வாயு தத்துவத்தையும், மகேஸ்வரனையும் வடகிழக்கு மூலையில் ஆசாக தத்துவத்தையும் சதாசிவனையும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில் குபேரனையும், மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில் யமனையும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் இந்திரனையும் பூசித்து பழம், தாம்பூலம் நிவேதித்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

வர்த்தனி பூஜை செய்து பாசுபதாஸ்திர பூஜை செய்து ஞானவாளை ஒப்புக்கொடுத்து யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டியபின் தசாயுத பூஜை செய்ய வேண்டும். வடகிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் ஆகியவற்றையும் வடகிழக்கில் தெற்கில் உள்ள கும்பத்திற் பத்மத்தையும் தென்மேற்கில் வடக்கேயுள்ள கும்பத்தில் சக்கரத்தையும் பூசித்து தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும் வரை பாதுகாக்க வேண்டும். பின்னர் சிவகும்ப பூஜை, சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும் இட்டு அதன்மேல் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து, தகனம் செய்யப்படும்.

✧ **உழைக்கக் கற்றபின் பொறுமையும், நேர்மையும் சக்தி வாய்ந்தவை.**

✧ **ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும், மரியாதையும், அன்பும் நிறைந்த சொற்களைப் பேசுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண வீட்டில் அபரக்கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

இந்நாளிற் கிரியை செய்யும்போது சைவக் குருக்களே இவற்றைக் கொண்டு வருவார்.

| | |
|---|---|
| நெல்லு | சமித்துக்கட்டு |
| பச்சையரிசி | பட்டுத்துணி |
| பயறு | குருக்கள் வேட்டி, சால்வை |
| உழுந்து | கும்பவேட்டி1 |
| எள்ளு | முட்டி 2 |
| தேங்காய் | சட்டி 2 |
| தேங்காயெண்ணெய் | செம்பு 13 |
| விபூதி | குடம்1 |
| சந்தனம் | குத்துவிளக்கு |
| குங்குமம் | உரல், உலக்கை |
| அபிஷேகக்கூட்டு | அறுகம்புல் |
| மஞ்சள்மா | மாவிலை, வாழையிலை |
| அரிசிமா | கோசலம், கோமயம் |
| அபிஷேகத் திரவியம் | பால், இளநீர் |
| பன்னீர் | மான்தோல் |
| நெய் | தட்டம் |
| தேன் | வேட்டி, சால்வை (கிரியை செய்வோருக்கு) |
| நல்லெண்ணெய் | வாழைப்பழம் |
| அரப்பு | எலுமிச்சம்பழம் |
| லவரந்தர் | பழவகைகள் |
| அத்தர் | பாக்கு |
| சாம்பிராணி | வெற்றிலை |
| தசாங்கம் | (இறந்தவருக்கு) வேட்டி, |
| நெற்பொரி | சால்வை அல்லது சேலை |
| நவதானியம் | சட்டை |
| கழிநூற்பந்து | கத்தி, தோரணம், கயிறு |
| பஞ்சவர்ண நூல் | தீப்பெட்டி |
| விளைவு சூடம் | 6m வெள்ளைத்துணி (புதியது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேஷ்டிக் கிரியைகளுக்குத் தேவைப்படும் பொருட்கள்

நெல்லு
பச்சை அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய் 20
கழிநூல் பந்து
பஞ்சவர்ண நூல்
விபூதி
குங்குமம்
சந்தனம்
பன்னீர்
அபிஷேகக் கூட்டு
அபிஷேகத்திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக் கட்டு
ஊதுபத்தி
விளைவுகூடம்
சாம்பிராணி
அரிசிமா
மஞ்சள் மா
நல்லெண்ணெய்
தட்டம்
மான்தோல்
பூ, மாலை, சரப்பந்து
அமுது
பலகார வகைகள்
ஒரு படிப்பச்சையரிசி பொங்கல்

2 தானத்திற்கு அரிசி, மரக்கறி
செங்கல்1
வைக்கோல் 1 கட்டு
கத்தி
வெற்றிலை
தீப்பெட்டி
பாக்கு
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
அறுகம்புல்லு
பால், தயிர்
கோசலம், கோமயம்
இளநீர்
வாழையிலை
மாவிலை
முட்டி 2
சட்டி 1
உரல், உலக்கை
தேங்காய் எண்ணெய்
சில்லறைப் பணம்
செம்பு 12
குடம் 1)
குத்துவிளக்கு
அரப்பு
குருக்கள் வேட்டி, சால்வை
கும்பவேட்டி
வேட்டி
பட்டுத்துண்டு
(சிகப்பு, பச்சை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையை உலர்த்தி இடித்து 3 படி அரிசியிற் சோறு எடுப்பது)
கறிவகை சிவப்பு மா (செங்கல் தூள்)
தென்னோலைத் தோரணம்
கரிமா (கரியில் இடித்து
கயிறு எடுப்பது)
1m வெள்ளைத் துணி (புதியது) தட்டம்

## வருட சிரார்த்தத்திற்குத் தேவைப்படும் பொருட்கள்

| | |
|---|---|
| மாவிலை | அறுகம்புல் |
| பூக்கள் | வாழைப்பழம் |
| எலுமிச்சம்பழம் | சர்க்கரை சிறிது |
| இஞ்சி 1 துண்டு | கறுப்பு எள் |
| நல்லெண்ணெய் 1 போத்தல் | தலை வாழையிலை 5 |
| நெய் | தேன் |
| கற்பூரம் | ஊதுபத்தி |
| இளநீர் | பால் |
| தயிர் | தேங்காய் 3 |
| பச்சை அரிசிமா | சிறிது உளுத்தம் மா |
| மஞ்சட்தூள் | ஐயருக்கு வேட்டி, சால்வை |

தானத்திற்கு அரிசி, மரக்கறி, உப்பு, புளி, பருப்பு,

| | |
|---|---|
| மிளகாய்த்தூள் | அரப்பு |
| சாம்பிராணி | விபூதி |
| சந்தனம் | குங்குமம் |
| நூற்பந்து | |

வாசலில் நிறைகுடம் குத்து விளக்கு வைக்கவேண்டும். தர்ப்பணம் செய்யுமிடத்தில் படம் வைத்து மாலை அணிவித்து ஒரு குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். கும்பம் வைக்க ஒரு செம்பு, பச்சையரிசி, கும்பமாலை, பிண்டத்திற்கு ஒரு மாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வடக்கு சனசமூக நிலையம்
# Nallur North Community Centre

Regd No J/VC/CC29/168
Ested 1993

சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

## எங்கள் ஊரவர்களின் நீங்காத நினைவுகளுடன்......

வேகமாக சுழன்று கொண்டிருக்கும் வாழ்க்கைச்சக்கரத்தில் நீர்க்குமிழ்கள் போல மனித வாழ்க்கைகள் தோன்றி மறைகின்றது. இவர்களில் ஒரு சில மனிதர்களுடைய வாழ்க்கை மட்டும் வரலாறாகின்றது - வழிகாட்டியாகின்றது. காரணம் அவர்கள் வாழும் காலத்தில் வாழ்ந்த வாழ்க்கை.

எங்கள் ஊரின் பெரியவர் கார்த்திகேசு ஐயா அவர்கள் நல்லூர் வடக்கு ஸ்ரீமஹா சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய அறங்காவற் குழுவின் நிர்வாக உறுப்பினராக இருந்து இறைபணியாற்றி வருகின்றார்.

இவரது குடும்பத்தினர் எங்கள் ஊரவர்கள், அயலவர்கள் எல்லோருடனும் அன்போடும், பரிவோடும் பழகி வருபவர்கள். ஸ்ரீ மஹா சந்திரசேகரப்பிள்ளையார் மீது மிகுந்த பக்தி கொண்டவர்கள்.
இந்த ஆலய புனரமைப்பிலும் வளர்ச்சியிலும் இவர்களது குடும்பம் ஈடுபாட்டுடன் பங்குபற்றி வருகின்றது.

நல்லூர்வடக்கு சனசமூகநிலையத்தின் சேவைகளில் இவர்களது பங்களிப்பு அளப்பரியது. இவ்வாறு எல்லோருடனும் அன்புடன் பழகிவந்த இவர்களது குடும்பத்திற்கு இப்படியொரு இழப்பு ஏற்பட்டிருப்பது ஊரவர்கள் அனைவருக்கும் வேதனையளிக்கின்றது.

எங்கள் ஊரின் 4 தலைமுறையின் உறவுகளான அமரர் மனோன்மணி கார்த்திகேசு, அமரர் சுகந்தி சதாசிவம், அமரர் கோபிகா அஜந்தன், அமரர் சத்தியா செல்வரஞ்சன், அமரர் செல்வரஞ்சன் சிமிநாத் ஆகியோரை பிரிந்து தவிக்கும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்துகொள்கின்றோம்.
உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் பரந்து வாழும் எங்கள் ஊரவர்கள் சார்பில் எமது இரங்கலை தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் நித்திய சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பூ.லிங்கநாதன்**
தலைவர்

**செ.ராஜேந்திரா**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**28.07.2019 அன்று ஏற்பட்ட வாகன வீதி விபத்தின் போது உயிரிழந்த அமரர்கள் சதாசிவம் சுகந்தி (தாய்) கோபிகா அஜந்தன், சத்தியா செல்வரஞ்சன் (அக்கா), சிமிநாத் செல்வரஞ்சன் (பெறாமகன்) மற்றும் இவர்களது அமரத்துவச் செய்தி கேட்டு அதிர்ச்சியில் நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்த மனோன்மணி கார்த்திகேசு (அம்மம்மா) அவர்களுக்கும் அவர்களுடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மனித வாழ்வு விதியின் பிரகாரமே அசைகின்றது. மண்ணில் பிறக்கின்ற மனிதர்கள் இறப்பது இயற்கையின் நியதி அந்நியதியினை மாற்றுதல் கடினம். ஆயினும் பிரபஞ்சத்தில் பிறக்கின்ற மனிதர்கள் தமது வாழ்நாள் முழுவதும் மக்களையும் தனது குடும்பத்தினரையும், வாழ்ந்த ஊரையும் நேசிக்கின்ற பண்புடையோர் மரணத்தின் பின்பும் மக்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அதற்கு இலக்கணமாக விளங்கிய அமரர் மனோன்மணி கார்த்திகேசு குடும்பத்தினர். அவர்களது மகள் அமரர் சுகந்தி சதாசிவம், அமரர் கோபிகா அஜந்தன், அமரர் சத்தியா செல்வரஞ்சன், அமரர் சிமிநாத் ஆகியோரின் எதிர்பாரத இழப்பு எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆற்றிவிட்டது. இவர்கள் அனைவரும் சிரித்த முகமும், கருணை உள்ளமும் கொண்டவர்கள் மனவலிமையுடன், கனிவு, பணிவு, நற்பண்பு, ஒழுக்கம், ஆசாரம், இறைபக்தி, குருபக்தி ஒருங்கே அமையப்பெற்றவர்கள். நல்லதொரு குறிக்கோளுடன் வாழ்ந்து வந்த இவர்கள் வாழ்வில் சூறாவளி போல் ஏற்பட்ட விபத்து 4 தலைமுறையை பாதித்து விட்டது. எங்கள் ஊரின் பெரியவரான திரு. ஆ. கார்த்திகேசு அவர்களின் பாசமிகு மனைவி இக்குடும்பத்தின் பிரதான குலவிளக்கு. எல்லோரும் வளமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தாயார்.

பார்வதியும் சிவனும் போல் வாழ்ந்து வந்த சிவபக்தர்கள் சிறி அண்ணரும் சுகி அக்காவும்.. யார் கண்பட்டதோ அவர்கள் குடும்பம் திருவருள் எனும் பெயர் கொண்ட பாரவூர்தியினால் சிதைக்கப்பட்டுள்ளதே... ஐந்து பெண்பிள்ளைகளை பெற்று ஒவ்வொருவரையும் இளவரசிகள் போல் வளர்த்தவர். அவர்களது வாழ்வு வளம்பெற்று வரும் வேளை தனது பூவுலக வாழ்வை நிறைவுசெய்து எம்மைவிட்டுச்சென்றுள்ளார்.

அவரது இரண்டாவது மகள் கோபிகா குடும்பத்தின் தைரியமிக்கவள் பெற்றோரின் எதிர்பார்ப்பிற்கேற்ப உயர்கல்வி பெற்று ஆசிரியயராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சேவையாற்றி வந்தார். பெயருக்கு ஏற்ப சாந்தமான நற்குணமிக்க கணவரை பெற்றவர்.தேவதைகள் போல இரண்டு குழந்தைகள்.இவ் இளவயதில் வாழ வேண்டியவர்கள்..இவர்களின் பிரிவு வேதனையிலும் வேதனை...

மூத்த மகள் சத்தியா. அவரது பாசமிகு மகன் சிமிநாத் வெளிநாட்டில் வசித்தாலும் விடுமுறைக்காலத்தில் சொந்தங்களுடன் குழாவி மகிழ்ந்திட பிறந்த ஊருக்கு வருகைதந்த இவர்கள் தாய்மண்ணை மிதிக்க முன் வானுலகம் சென்று விட்டார்கள்....

நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ மஹா சந்திரசேகரப்பிள்ளையாரின் பக்தியும் ஈடுபாடும் கொண்ட இவர்கள் நாள்தோறும் விநாயகப்பெருமானை வழிபட்டு வருபவர்கள். அமரர் கோபிகா அஜந்தன் அவர்கள் எம்மைவிட்டு பிரிந்து செல்வதற்கு முதல்நாள் ஆலய இராஜகோபுர திருப்பணிக்கென தனது தந்தையார் வழங்கிய திருப்பணி நிதியினை எம்மிடம் வழங்கி சென்றமை எம்மனதின் முன்னே நிற்கின்றது. மானிடராக பிறந்து அந்தப்பிறவியின் மகிமையை உணர்ந்தும். கற்றும். கேட்டும். சிந்தித்தும் குறுகிய கால எல்லைக்குள் பிரகாசித்து வாழ்வியல் என்ற முறைகளை கருத்தில் கொண்டு வாழ்ந்தவர்கள். காலநியதிக்கு ஏற்ப மானிடராக பிறந்தவர் இறப்பது திண்ணம்.என்கின்ற காலதேவனது ஆனைப்படி இவ்வுலகை விட்டு நீங்கிய இவர்களின் ஆத்மாக்கள் இறைவன் திருவடி நிழலில் நித்திய சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்திய

**நடேசபிள்ளை கஜேந்திரகுமார்**
**உற்றாய், ஊரவராய்,உறவினராய்.**
**பிரதேச சபை உறுப்பினர், வலிகிழக்கு பிரதேசசபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் அன்றி நமக்கென்ன தெரியுமா?

ஆத்மா அழிவதில்லை ஆம் ! அது கொல்வதும், இல்லை கொல்லப்படுவதுமில்லை. இந்த மிகப்பெரிய உண்மையுடன் உலகு இயங்குகின்றது.

மண்ணில் பிறந்தார் யாவரும் உறவு என்ற உணர்வில், பின்னிப் பிணைந்து வாழ்வு என்னும் ஒவியத்தை, காலத் தூரிகையால் வரைந்து கொண்டிருக்கின்றார்கள்.

உறவுகள் மனித வாழ்க்கைக்கு ஏதுவானவை. தாயென்றும், தாரமென்றும், மகளென்றும், பேரனென்றும், உதிரத்தின் வழி நின்று வாழும் மனிதன்..... தன்னை விடுவித்துக் கொண்டு.... உறவுகள் மறையும் போதுதான் வாழ்க்கை என்ற சொல்லிற்கான மூலப்பொருளை உணர முயற்சிக்கின்றான்.

மரத்தில் காய்ந்த காயானது, கனியாவதும் உண்டு. பிஞ்சில் கருகி வீழ்வதும் உண்டு. காயும், கனியும், பிஞ்சுமாய் கொப்போடு முறிந்து வீழ்வதுமுண்டு.

எப்படி வீழ்ந்த போதும் - அது, இறையாம் ஈசனின் திருவடியை, என்றோ ஒரு நாள் போய் சேரும் என்பது, விதி எழுதிய விதி.

ஈசன் பதமே உயிரின் இறுதி நிலை. தான் படைத்த உலகை தானே ஆட்சி செய்யும் பெருமான் சட்டநாதன். தான் வகுத்த சட்டப்படி உலகை ஆள்கின்றான்.

யாவும் அவனே என்ற உண்மையை மனிதன் உய்ந்தே அறிவானாயின், அவன் ஆடும் நாடகத்தை , மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்கும் பக்குவத்தை, மனிதன் பெறுவான்.

"அவன் அருளாலே" - என்ற மணிவாசகரின் வேதவாக்கு எடுத்துரைப்பது, அந்த உண்மையையேயாம். -

முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, மூர்த்தியாம் அவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் கேட்டு, பேர்த்தும் அவனுக்கே பிச்சியாகி, தன்னை மறந்து.தன் நாமம் கெட்டு, இறைவன் தாழ் அடி நோக்கி தலைப்படுதலே, மானிடப் பிறவியின் பயன்.

இதை உணர்வோம் நாம். இறை சித்தம் பணிவோம். நமக்கென்ன என்று, எட்டுண்டு இருப்போம்.

அவன் அன்றி நமக்கென்ன தெரியும்? நம்மால் என்ன முடியும்? சென்றவர் யாவரும் சட்டநாதன் திருவடி சேரட்டும்.

மண்ணில் பிறந்த எல்லோரும் மரணிப்பது இயற்கை. பிறப்பு தொடக்கம் இறப்பு வரையான வாழ்ந்த காலத்தில் சிலர் மட்டும் தமக்கென உரிய சிறப்பியல்புகளினால் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்று விடுகின்றனர். இந்த வகையில் அமரர் திருமதி கோபிகா அஜந்தன் அவர்களும் மக்கள் மத்தியில் தனக்கென ஒரு இடத்தினை பெற்றுக் கொண்டார்.

நல்லன்புக்கு பாத்திரமான உறவுகள் நிச்சயமாய் சொர்க்கத்திற்கு தான் போகும் அத்தகையவரின் ஆத்மா இறைவனின் ஆசியில் நிறைவு பெறும். என்ற நம்பிக்கையோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல சட்டநாதர் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

தெ- கிதரன் (கோபி)
பிரதேச சபை உறுப்பினர்
நல்லூர் பிரதேச சபை

- கல்வி என்பது ஏணி. அதில் ஏறுபவன்தான் ஞானி.
- பயம் இருந்தும் இல்லாததுபோல் நடிப்பதுதான் துணிவு
- நீ ஒவ்வொரு நாளும் காணும் தெய்வம் உன் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொதேண் விளையாட்டுக் கழகம்
சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்
பதிவு இல: NP/JAF/NAL/15
NORTHERN SPORTS CLUB
SADDANATHAR ROAD, THIRUNELVELY EAST, JAFFNA
Reg. No.:NP/JAF/NAL/15
Ref. No. :NSC/REQ/2019/25 Email :northernsportsclubnallur@gmail.com Date : 11.11.2019

Mr.K.Nishaaharan
President

Mr.K.Mathavan
Vice President

Mr.S.T.Prasanna
Secretary

Mr.G.Matheisan
Asst. Secretary

Mr.S.Vipoosan
Treasurer

Members
Mr.T.Kiritharan
Mr.V.Mohanappriyan
Mr.U.Aruuon
Mr.U.Ashothan
Mr.B.Babeesan
Mr.K.Vethakr eeswaran

## முடிவில்லாத வானம்

முடிவில்லாத வானம் – தொடரும் பயணங்கள்
சொல்ல முடியாத ஆசையில் சொந்த ஊர்ப் பயணம்

காளையை கை விட்ட யமன்
காவு வாங்க நவீனமாய்
உருவாக்கிய பார ஊர்தி அது
பாவி அவர்கள் என்னவென்று புரியாது
கறுப்பு கார்பெட் றோட்டில் நீண்ட பயணம்
மோதி அந்த யமவாகனம் உயிரை வாங்கியதே
ஊர் அழுதது, உறவு அழுதது
உலகமே அழுதது, நாமும் கலங்கினோம்

கலங்கிய துன்ப கண்ணீர் வற்றுவதற்குள்
ஏக்கத்தில் இன்னொரு உயிரையும் வாங்கியது
முடிவில்லாத வானம்

நொதேணின் வளர்ச்சியில் ஓர்
அங்கமாய் இருக்கும் இக்குடும்பத்தில்
எத்தனை இழப்புக்கள்
கண்களில் வரும் கண்ணீரை
விட ஆறுதல் எதுவுமில்லை.
கண்கலங்கி கதறுகின்றோம்.
உங்கள் பிரிவால்....

ஆழ்ந்த துயரத்தில் இருக்கும்
இக்குடும்பத்தினருக்கு ஆறுதல்
கூறுகின்றோம்.
இறைவனடி சேர்ந்த எமது
நொதேண் உறவுகள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்
நொதேண் விளையாட்டுக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

கதிகலங்கி கண்ணீரில் நிற்கின்றது
'கல்வியங்காடு..."
நடுநடுங்கி நலிந்து நிற்கின்றது
"நல்லூர்..."
திடுதிடுத்து திகைத்து நிற்கின்றது
'திருநெல்வேலி..."
கொந்தழித்து கோபத்தில் நிற்கின்றது
'கோப்பாய்..."
அழுதழுது அதிர்ச்சியில் நிற்கின்றது
'அயற்கிராமங்கள்..."
சோர்வுற்று சோகத்தில் நிற்கின்றது
'சொந்தங்கள்..."
பரிதவித்து பற்றிழுந்து நிற்கின்றது
'பந்தங்கள்..."
சீரிய குணத்தான் சிறி அண்ணாவின் சுகந்தமான
வாழ்வளித்த 'சுகந்தியே..."
அமைதியான மாமனிதர் அஜந்தனின்
கோபமில்லா மங்கை 'கோபிகாவே..."
ரஞ்சனமான நண்பர் செல்வரஞ்சனின்
சத்தியமான நங்கை 'சத்தியாவே..."
ரஞ்சன் - சத்தியா தம்பதியின்
தார்மீகப் புதல்வன் 'சிமிநாத்தே..."
பிள்ளை பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளையென சந்ததி வளர்த்த
கார்த்திகேசையாவின் 'மனோன்மணித்தாயே..."
ஒரு கொடிச் சந்ததியாகச் சென்றீரோ?..
கணவன்மார் கண்கலங்கிட...
கைக்குழந்தைகள் சிணுசிணுங்கிட...
சொந்தங்கள் கதறியழுதிட...
உறவுகள் சோகத்தில் பரிதவித்திட....
தாங்கமுடியாமலும்... தவிர்க்கமுடியாமலும்...
கண்ணீர் காணிக்கை... செலுத்துகிறோம்...
ஓம்... சாந்தி... சாந்தி... சாந்தி...

**நொதேண் விளையாட்டுக் கழக**
**கல்வியங்காடு நல்லூர் நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



## என்றென்றும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"

எமது இல்லத்தரசி அமரர் கோபிகா அஜந்தன் அவர்களது அமரத்துவச் செய்தி கேட்டு உடன் வருகைதந்து எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தேவையான உதவிகளை வழங்கிய நண்பர்களுக்கும் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் முகநூல் என்பவற்றின் மூலம் துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்தும் பதாதைகள் வைத்தும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட அன்பர்களுக்கும் மரணச்சடங்கு கிரியைகளையும் மற்றும் சபிண்டீகரண நிகழ்வையும் நடாத்திய அந்தணப் பெருமக்களுக்கும் அவர்களுக்கு உதவி புரிந்த அன்பர்களுக்கும், ஓதுவார்களுக்கும் இன்றைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கும் நினைவு மலரதனை சிறந்த முறையில் வெளியிட்ட அன்றா நிறுவனத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி


தனபாலசிங்கம் அஜந்தன்
மற்றும் குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடி மலர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion.




Print@Andra 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org